1987 நவம்பர் 17]

(ஈ) செங்கற்பட்டு மருத்துவமனையில் மயக்க மருந்தியல் மருத்துவர்கள் இல்லாததால் நோயாளிகள் பாதிப்பு குறித்து.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "செங்கற்பட்டு அரசு மருத்துவமனையில் மயக்கம் கொடுக்கும் மருத்துவர்கள் இல்லாததால் அறுவை சிகிச்சைகள் கடந்த 2 மாதங்களாக நடைபெறாததால் நோயாளிகள் படும் இன்னல் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியில் இரண்டு மயக்க மருந்தியல் பேராசிரியர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒருவர் 10—8—1987 முதல் நான்கு மாதங்களாக ஊதியமில்லா விடுப்பில் சென்றுள்ளார். அவர் விடுப்பு 9—12—1987 உடன் முடிவடைகிறது. மற்றொரு பணியிடம் தற்போது நிரப்பி 10—11—1987 அன்று ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. அந்த மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு மயக்க மருந்தியலில் ஐந்து உதவி அறுவை மருத்துவர்/பயிற்றுனர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டன. அவற்றுள் மூன்று பணியிடங்களில் ஏற்கனவே மருத்துவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். மற்றொரு பணியிடத்திற்கு சென்னை மருத்துவ கல்லூரியிலிருந்து ஒரு மருத்துவர் மாற்றப்பட்டுள்ளார். அவர் பணியில் சேர இருக்கிறார். மற்றும் ஒரு பணியிடத்தில் உள்ள மருத்துவர் மாறுதலில் சென்றுள்ளதால், அவ்விடம் நிரப்பப்படாமல் உள்ளது. மயக்க மருந்து கொடுக்கும் மருத்துவர்கள் பற்றாக்குறையாக இருக்கின்ற காரணத்தால் காலியாக உள்ள இடங்களை உடனுக்குடன் நிரப்ப இயலவில்லை. இருப்பினும் அவற்றை நிரப்ப தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

3. கடந்த மூன்று மாதங்களில் சுமார் 106 அறுவை சிகிச்சைகளும், 632 குடும்பநல அறுவை சிகிச்சைகளும் செங்கற்பட்டு அரசு மருத்துவமனையில் செய்யப்பட்டுள்ளன. மேலே கூறப்பட்ட நிலையில் செங்கற்பட்டு அரசு மருத்துவமனையில் விருப்ப அறுவை சிகிச்சைகள் முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆகவே, கடந்த இரண்டு மாதங்களாக அறுவை சிகிச்சை நடைபெறாமல் நோயாளிகள் இன்னல் படும் நிலை செங்கற்பட்டு மருத்துவமனையில் எழவில்லை.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே நான் பார்க்கின்றபோது அமைச்சரவர்கள் மயக்க மருந்து கொடுக்கும் மருத்துவர்கள் பற்றாக்குறையாக இருப்பதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அதேபோல் அங்கே இருக்கின்ற மயக்க மருந்து கொடுக்கும் மருத்துவர் ஒருவர் 4 மாத காலம் சம்பளம் இல்லாமல், விடுப்பில் சென்றுள்ளதையும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் அவர்கள் சொல்லியிருப்பது கடந்த 3 மாத காலமாக 106 அறுவை சிகிச்சைகளும், 632 குடும்பநல அறுவை சிகிச்சைகளும் நடைபெற்றதாகச் சொல்லியிருக்கிறார்கள். நான் சொன்னது 2 மாதம் என்று சொல்லியிருக்கிறேன். அதற்கு முன்பாக ஒரு மாத காலத்திலிருந்து அறுவை சிகிச்சைகள் நடைபெற்றதா? அல்லது 3 மாத காலம் தொடர்ச்சியாக அறுவை சிகிச்சைகள் நடைபெறாமல் மருத்துவமனை இயங்கிக் கொண்டிருந்ததா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அளித்திருக்கின்ற விவர அறிக்கையில் அறுவை சிகிச்சைகள் நடந்து கொண்டிருப்பதற்கு புள்ளிவிவரங்கள் தந்திருக்கிறேன். மேற்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் என்ன கேட்கிறார் என்று தெரியவில்லை. இருந்தாலும் மயக்க மருந்து கொடுக்கின்ற மருத்துவர்கள் குறைவாக இருக்கிறார்கள் என்பது உண்மைதான். அதை அதிகமாக ஆக்க வேண்டுமென்று அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது. இப்போது அந்த மயக்க மருந்து கொடுக்கும் மருத்துவர்கள் புதியதாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அநேகமாக அவர்கள் சேர்ந்து இருப்பார்கள். இந்தக் குறைபாடு நீக்கப்பட்டுவிட்டது என்று கருதுகிறேன்.

1987 நவம்பர் 17]

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மயக்க மருந்து கொடுக்கின்ற மருத்துவர்கள் குறைவாக இருப்பதாகச் சொல்கிறார்கள். அதை நிறைவு செய்வதற்கு என்ன வழி வகைகள் இந்த அரசாங்கத்திலே இருக்கிறது என்பதையும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். நான் கேட்டது, அறுவை சிகிச்சைகள் 3 மாத காலமாக நடப்பது பற்றி அவர்கள் கணக்கு கொடுத்திருக்கிறார்கள். முன்பிருக்கிற ஒரு மாதத்தில் தான் இந்த அறுவை சிகிச்சைகள் செய்யப் பட்டதா என்பதை சரிபார்த்துச் சொல்ல வேண்டும். இதற்கு நான் இன்னொரு சான்றுகூட சொல்ல இருக்கிறேன். செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், புதுப்பட்டியைச் சார்ந்த பெண், மதுராந்தகம் அரசு மருத்துவமனையிலே சென்ற 29—10—1987 ஆம் நாள் அன்று குடும்ப நல அறுவை சிகிச்சை செய்யப்பட்டு இறந்துவிட்டார். அதற்குக் காரணம் அங்கே மயக்க மருந்து கொடுத்தவர் சரியான முறையிலே கொடுக்க வில்லை, அதிகமாகக் கொடுத்துவிட்டார் என்ற சந்தேகம் இருக்கிறது. இதை சரிபார்த்து அமைச்சர் அவர்கள் இதை களைவதற்குண்டான முயற்சிகளை செய்வாரா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: துணைத் தலைவர் அவர்களே, மயக்க மருந்து கொடுக்கின்றவர்களை பயிற்சிப் பதற்காக இருக்கின்றவர்களின் எண்ணிக்கையை கூடுதலாக ஆக்கலாமா என்று அரசு பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறது. அதன் மூலம் இந்தக் குறைபாட்டைப் போக்க முடியும் என்று நினைக்கிறோம். மெடிக்கல் கோடில் மயக்க மருந்து கொடுக் கின்றவர்களுக்கு 6 மாதம் பயிற்சி இருந்தாலே போதும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதன்படி பயிற்சி கொடுத்து குறை பாடுகளை விரைவிலே போக்க முடியும் என்று நான் நம்புகிறேன். மதுராந்தகத்தில் அறுவை சிகிச்சை செய்யும்போது ஒருவர் இறந்துவிட்டார் என்று சொல்கிறார். அவர் மயக்க மருந்து கொடுத்துவிட்டதால் இறந்துவிட்டாரா என்பது தெரியாது. இந்த அவையிலே அடிக்கடி அதிகமாக மயக்க மருந்து கொடுத்து விட்டார்கள் என்று சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். நான் உறுப்பினர்களுக்கு தெரிவித்துக்கொள்வது. இன்று கூட பத்திரிகையிலே வேறு ஒரு மாவட்டத்தைப்பற்றி செய்தி வந்திருக் கிறது. ஒரு பெண்ணிற்கு மயக்க மருந்து கொடுத்து கழுத்துக்கு

கீழே உடல் வேலை செய்யவில்லை என்ற செய்தி வந்து இருக்கிறது, பார்த்திருக்கலாம். மயக்க மருந்து கொடுப்பதனால் இம்மாதிரி சிக்கல் எல்லோருக்கும் வருவதில்லை. ஏதோ வேறு சில உடல் கோளாறு காரணமாக அந்த விபத்துக்கள் ஏற்படக் கூடும். எனவே மயக்க மருந்து கொடுத்தவர்கள் தவறாக கொடுத்தார்கள் என்று குற்றம் சாட்டுவது சரியல்ல. அப்படித் தவறாகக் கொடுத்திருப்பார்களானால் தக்க நடவடிக்கை எடுப்பதற்கு அரசு தயங்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(உ) அரியலூர், உடையார்பாளையம், பெரம்பலூர் வட்டங்களில் மூளைக்காய்ச்சல் நோயினால் குழந்தைகள் பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் டாக்டர் ந. மாசிலாமணி, கே. சுப்பராயன், ஈ. வெ. கி. ச. இளங்கோவன், கே. வெங்கடாசலம், மா. மணிமாறன், ஆ. நடராசன், க. சோலைராசு, பொ. உத்திராபதி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "அரியலூர், உடையார்பாளையம், பெரம்பலூர் வட்டங்களில் தற்போது மூளைகாய்ச்சல் நோயினால் குழந்தைகள் பாதிக்கப்பட்டிருப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

தமிழ் நாட்டில் காணப்படும் என்சிபலைடிஸ் (Japanese Encephalitis) என்னும் மூளைக்காய்ச்சல் நோய் புதிதல்ல. பல ஆண்டுகளாக இருந்து வரும் ஒன்று. வைரஸ் மூளைக்காய்ச்சல் நோய் சாதாரணமாக வாத்துகள் உள்பட சில